ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும்

# மரங்களைப் பராமரிக்க 4 குத்தகையாளர்கள்

# டிபிகேஎல் ஏற்பாடு

கோலாலம்பூர், மே 31-

தலைநகரில் உள்ள மரங்களைப் பராமரிக்கும் பணிகளுக்காக கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்) ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதி யிலும் 4 குத்தகைக்காரர் களை ஏற்பாடு செய்யும். கோலாலம்பூர், டத்தோ பண்டார் டத்தோ கமாருல் ஸமான், மாட் சாலிட் உடனான சந்திப்பிற்குப் பிறகு இத்தகவலை தொடர்புத்துறை அமைச்சர் ஃபாமி ஃபட்ஸில் தமது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

அண்மையில் பலத்த காற்றினால் பாதிக்கப்பட்ட லெம்பா பந்தாய் பகுதிவாழ் மக்களைச் சந்தித்துப் பேசிய பிறகு, நான் கோலாலம்பூர் டத்தோ பண்டாருடன் சந்திப்பு நடத்தி இந்த விவகாரம் குறித்தும் கலந்துரையாடி அதிலும் தலைநகரில் உள்ள மரங்கள் நேர்த்தியாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதில் மாநகர் மன்றத்தின் கட்டமைப்பு- சுற்றுச்சூழல் மேம்பாட்டு இலாகாவின் பங்களிப்பு, வானிலை மாற்றம் விவகாரங்கள் குறித்து நாங்கள் விவாதித் தோம். இந்நிலையில் வெட்டப்படும் ஒவ்வொரு மரத்திற்குப் பதிலாக 100 மரங்களை நட வேண்டும் என்ற பிரதமரின் அறிவுறுத் தலைப் பூர்த்தி செய்ய மாநகர் மன்றத் தரப்பு உறுதி பூண்டுள்ளது என லெம்பா பந்தாய் நாடாளுமன்ற உறுப்பினருமான ஃபாமி ஃபட்ஸில் தமது கருத்துப் பதிவேற்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இம்மாதம் 25ஆம் தேதி அடை மழை, பலத்த காற்றினால் தலைநகரில் உள்ள சில பகுதிகள் குறிப்பாக லெம்பா பந்தாய், பங்சாரில் மரங்கள் விழுந்தது மட்டுமன்றி அடுக்குமாடி குடியிருப்புக் கூரைகளும் பறந்தன என்பது குறிப்பிடத்தக்கது.




SU